# தினசரி வழிபாட்டு முறை



# 19. ஹரி நாமம்

1. ஆதிஅயனொடு தேவர் முறையிட ஆசிதருவது ஹரிநாமம்
ஆவிபிரிவுறும் வேளை விரைவினில் ஆளவருவது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஓதும் அடியவர் நாவில் அமுதென ஊறிநிறைவது ஹரிநாமம்
ஓலமிடு கஜராஜன் விடுபட ஓடி அருள்வது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

வேதமுடியிலும் வேள்வி முடிவிலும் மேவிஉறைவது ஹரிநாமம்
வீசும் அலைகடல் சேஷன்நிழல்செய நீடுதுயில்வது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

நாத ஜய ஜகந் நாத நாமவென நாளும் அவனடி பணிவோமே
நாம பஜனையில் நாமமஹிமையால் நாதனவனருள் பெறுவோமே
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

2. பூதகண பரிவாரபரசிவ பூஜைபெறுவது ஹரிநாமம்
பூமிபுவனமும் ஏகபதமளவாக வளர்வது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

தாதைதொடுமிட மேதுமவனுளன் தேவன் எனும் மகனுரைபோலே
தாக நரம்ருக கோர வடிவோடு தூணிலெழுவது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

காதலொடு கவி பாடுமடியவர் காண வருவது ஹரிநாமம்
காலநிலை கருதாது துதிசெயத் தாவி வருவது ஹரிநாமம்
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஏதுவிலகினும் ஏதுதொடரினும் ஈசனவனருள் நினைவொன்றே
ஏறியநுபவமீறி அனைவரும் ஏக பஜனையில் மகிழ்வோமே
ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே